கிராம நிர்வாக நடைமுறைகள் - பகுதி 16

TNPSC VAO: Basics of Village Administration Notes: Part 16:

கொள்ளை நோய்கள் மற்றும் இதர தொற்றுநோய்கள்

1939-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட நோய்கள் கொள்ளை நோய்களாகவும் தொற்றுநோய்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

1. மூளைப்போர்வை (ஜன்னி)
2. சின்ன அம்மை
3. பெரிய அம்மை
4. காலரா
5. தொண்டைக்கட்டு நோய்
6. தொழுநோய்
7. தட்டம்மை
8. வெறிநாய்க்கடி
9. பிளேக்கு நோய்
10. செந்நச்சுக் காய்ச்சல் (இந்தியாவில் இல்லை)
11. குடற்புண் காய்ச்சல் (டைபாய்டு)
12. மஞ்சள் காமாலை
13. கக்குவான் இருமல்
14. மூளைக் காய்ச்சல்
15. காச நோய்
16. குருதிக் காய்ச்சல்
17. குளிர்க் காய்ச்சல் (மலேரியா)
18. இசிவு நோய்
19. இளம்பிள்ளை வாதம்

கொள்ளை நோய்கள் மற்றும் இதர தொற்றுநோய்கள்: கிராம நிர்வாக அலுவலரின் கடமைகள்

1) மேலே அறிவிக்கப்பட்டுள்ள இந்த நோய்கள் ஏதாவது யாருக்காவது கண்டிருந்தால், அது குறித்து கிராமத்தில் உள்ள சுகாதாரப் பணியாளர் அல்லது அப்பகுதி சுகாதார ஆய்வாளருக்கு கிராம நிர்வாக அலுவலர் உடனடியாக தெரிவிக்க வேண்டும்.
2) இதனுடைய நகல் ஒன்றினை வருவாய் ஆய்வாளருக்கும் வட்டாட்சியருக்கும் அனுப்ப வேண்டும்.
3) மேலும் இவை தவிர, வேறுவிதமான அசாதாரண நோய் பரவினாலும் கிராம நிர்வாக அலுவலர் அது குறித்து ஓர் அறிக்கையை சம்மந்தப்பட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.
4) கிராமத்தில் பொது சுகாதாரத்தைப் பேணுவதில் கிராம நிர்வாக அலுவலரின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
5) எனவே விழிப்புடன் செயல்பட்டு தக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும், நோய் தாக்கிய பின் உடனடியாக நோயைக் குணப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் சேர்ந்து மேற்கொள்வது கிராம நிர்வாக அலுவலரின் கடமையாகும்.

கால்நடை நோய்கள்

1) வெக்கை, அடைப்பான், சப்பைநோய், தொண்டை அடைப்பான் நோய், ஆட்டம்மை, ராபீஸ் போன்றவை கால்நடைகளைத் தாக்கும் கொடிய நோய்களாகும்.

கால்நடை நோய்கள்: கிராம நிர்வாக அலுவலர்களின் கடமைகள்

1) கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் சாதாரணமாக கால்நடைகளைத் தாக்கக்கூடிய நோய்களும் கொள்ளை நோய்களும் பரவாமல் தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள்.
2) அதுபோன்ற நேர்வுகளில் தடுப்பூசி முறை (அ) நோய்த் தடுப்பு சிகிச்சை முறை பற்றி கால்நடை உரிமையாளர்களுக்கு அறிவுரைகளை கிராம நிர்வாக அலுவலர்கள் வழங்க வேண்டும்.
3) கால்நடைகளுக்கு நோய் கண்டவுடன் உடனடியாக கிராம நிர்வாக அலுவலர் வட்டாட்சியருக்கும் கால்நடை பராமரிப்பு அலுவலர்களுக்கும் அறிக்கை அனுப்ப வேண்டும்.
4) கால்நடை அலுவலர்கள் கிராமத்துக்கு வந்து உரிய நோய் தணிய நடவடிக்கை எடுப்பது குறித்து வாரம் இருமுறை வட்டாட்சியருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.
5) நோய்களால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை இதர கால்நடைகளிருந்து விலக்கி வைக்கவும், தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கால்நடை உரிமையாளருக்கு அறிவுரைகள் வழங்க வேண்டும்.